Journal of Social Review
Volume 2 (1)
June 2014
Department of
Social Sciences

# கிழக்கு மாகாண முஸ்லிம்களின் கல்வி மரபில் பயன்தரத்தக்க சில குறிப்புக்கள்

*எம்.ஏ.எம். றமீஸ்*

## ஆய்வுச் சுருக்கம்

கிழக்கு மாகாண முஸ்லிம்களின் கல்வி மரபில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய பல விடயங்கள் உள்ளன. அவற்றுள் கிறிஸ்தவம், பெண்கள், கல்விமுறை தொடர்பாக புதிய தகவல்களை அறியக்கூடியதாகவுள்ளது. அத்தகவல்கள் பற்றிய சிறிய பதிவொன்றினை இக்கட்டுரை தருகின்றது. கட்டுரைக்காக இரண்டாம் நிலைத் தரவுகள் எடுத்தாளப்பட்டுள்ளன. மேலும் விரிவான ஆய்வுக்கான குறிப்பாகவே இக்கட்டுரை அமைகிறது.

## அறிமுகம்

இலங்கையில் கிழக்கு மாகாணம் பல வழிகளில் முக்கியத்துவம் பெறுகின்ற பிரதேசமாகும். இந்நாட்டின் சிறப்பம்சமான பல்வகைமையை இங்கு தெளிவாகக் கண்டுகொள்ள முடியும். இங்கு மிகப் பெரும்பான்மையாக இந்துக்களும் முஸ்லிம களும், சிறுபான்மையாக பௌத்தர்களும் கிறிஸ்தவர்களும் வாழ்ந்து வருகின்றனர். “வேற்று நாட்டவர் ஈழத்துக்கு வந்து கலக்கு முன்னர் சிங்களவர், தமிழர், முஸ்லிம் ஆகியோரும் மதம், மொழி வேறுபாடின்றி ஒன்றுபட்டு வாழ்ந்திருக் கின்றனர் என்பதற்குப் போதிய சான்றுகள் உள்ளன” என வி.சி. கந்தையா மட்டக் களப்புத் தமிழகம் (1964) இல் குறிப்பிடுவது இங்கு கவனிக்கத்தக்கது.

கிழக்கு மாகாண முஸ்லிம்களின் வரலாற் றிலிருந்து தமிழர்களையும் தமிழர்களின் வரலாற்றிலிருந்து முஸ்லிம்களையும் பிரித்துப் பாரக்க முடியாது. கிழக்கு மாகா ணத்தின் வடபகுதியிலே தமிழர்கள் செறிந்து வாழ தென்பகுதியில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்கிறார்கள். பொதுவாகக் கிழக்கு மாகாணம் எங்கும் ஓர் ஊரில் முஸ்லிம் களும் மறு ஊரில் தமிழர்களுமாகக் கலந்து வாழ்ந்து வருகின்றனர். குடி வழக்கு முறை, கல்யாணப் பாரம்பரியம், சீதன வழக்கு, தொழில் முறைகள், சமய ரீதியான சடங்குகள் முதலானவற்றில் இவ்விரு சமூகத்தினரும் மிக மிக நெருக்கமாக இணைந்திருந்தனர். ஐரோப்பியர் அறிமுகப் படுத்திய நவீன கல்விப் பாரம்பரியத்துக்கு முன்னர் முஸ்லிம்களின் ‘ஓதப்பள்ளி’ முறையும் தமிழர்களின் திண்ணைப்பள்ளிக்கூட முறையும் அவ்வச் சமூகத்திலே பிரசித்தி பெற்றிருந்தது. குறிப்பாக திண்ணைப்பள்ளிக்கூட மரபில் முஸ்லிம்களும் கல்வி கற்றதற்கான ஆதாரங்கள் உள்ளன.

முஸ்லிம்கள் பெரும்பாலும் கல்வியில் அக்கறை காட்டவில்லை. தாம் பின்பற்றிய மார்க்கத்தின் ஒழுக்கத்தில் அவர்கள் அதிகம் அக்கறை செலுத்தியிருந்தனர். மார்க்கம் அவர்கள் பின்பற்றிய அவ்வகையான ஒழுக்கத்தையே வற்புறுத்தியதோ இல்லையோ மார்க்க சம்பிரதாயத்துக்குள் அவர்கள் தம்மை அதிகம் இணைத்துக் கொண்டனர். அவர்கள் கட்டைக்களிசான் போட விரும்பவில்லை ஆங்கிலம் கற்க விரும்பவில்லை உலோ காயுதக் கல்வியில் ஈடுபாடு காட்டவில்லை. மொட்டையடித்திருக்கவும் சாறன் அல்லது நீண்ட சிறுவால் அணிந்திருக்கவும் தொப்பி அணிந்திருக்கவும் அறபுத் தமிழிலே மார்க்க

சம்பந்தமான சட்டங்களைக் கற்றுக் கொள்ளவுமே அவர்கள் விரும்பினர். தமது தாய்மொழியான தமிழை விட தமது சமய மொழியான அறபியில் கற்பதையே அவர்கள் சரி எனவும் கண்டனர். பெண்கள் கல்வி கற்பதை முற்றாக அவர்கள் தடுத்தனர் அல்லது விரும்பவில்லை.

இந்தச் சமூகத்திற்கு மத்தியில்தான் அறிஞர் சித்திலெவ்வையின் 'முஸ்லிம் நேசன்' கல்வி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. சித்தி லெவ்வையின் 'அசன்பே சரித்திரம்' என்ற நாவல், நவீனத்துவத்தை ஆதரிக்கும் 'பாளினா' என்ற முஸ்லிம் பெண்ணை அடை யாளமாகக் கொண்டு முஸ்லிம்களிடையே சீர்திருத்தத்தை வேண்டி நின்றது. இக்கால கட்டத்தில் பிரித்தானியர்களின் நிருவாக முறைமை இலங்கை முழுக்கப் பரவி இருந்தது.

கிழக்குப் பிரதேசத்தில் நிருவாக முயற் சிகளில் ஈடுபட்ட அவர்கள் இப்பிரதேசத் தவர்களிடம் ஆங்கிலக் கல்விக்கான விழிப்புணர்ச்சியினையும் ஏற்படுத்தினர். அத்தோடு அவர்கள் கல்வி கற்பதற்கான வாய்ப்புக்களையும் ஏற்படுத்தத் தொடங் கினர். இம்முயற்சியில் பெரும்பாலும் கிறிஸ்தவ மிஷனறிகளே ஈடுபட்டன. இப்பிரதேசத்தில் அரசாங்க பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் மிஷனறிப் பாடசாலைகளே உருவா கின. இப்பாட சாலைகளில் முஸ்லிம்களும் கல்வி கற்பதற்கான வாய்ப்பு உருவாக் கப்பட்டது. தம் மதத்தின் மேலுள்ள பற்றின் காரண மாகவும் கிறிஸ்தவர்களின் பாடசாலைக்குச் சென்று படிப்பதிலிருந்த பயத்தின் காரணமா கவும் அம் மிஷனறிகளுக்குச் செல்ல முஸ்லிம்கள் பெரிதும் விரும்ப வில்லை.

"பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் இலங்கையில் கிறிஸ்தவ சமயத்தையும் ஆங்கில மொழியையும் பரப்பினர். தமது சமயத்தையும் கலாசாரத்தையும் பாது காத்துக் கொள்ளத்தக்கதாக முஸ்லிம்கள் கிறிஸ்தவ மிஷனறி செயற்பாடுகளையும் ஆங்கிலக் கல்வியையும் நிராகரித்தனர்." (மன்சூர் மொஹமட் பாஸில், 2004:201)

அப்போதே கிறிஸ்தவ மிஷனறிகளைச் சேர்ந்தவர்களும் அதன் ஆசிரியர்களும் முஸ்லிம் பிரதேசங்களில் வீதி வீதியாகச் சென்று பாடசாலைக்கு அவர்களை அழைத்த வரலாறு இருக்கிறது.

அக்காலத்தில் கிறிஸ்தவர்கள் மதமாற்றத் தையே இப்பிரதேசக் கல்வியின் குறிக் கோளாகக் கொண்டுள்ளனர் என்ற நம்பிக்கை முஸ்லிம்களிடம் விரவியிருந்தது. இதனாலும் அம்மிஷனறிகள் கல்விக்காக அறவிட்ட கட்டணங்களின் காரணமாகவும் அப்பாடசாலை களுக்குச் சென்று கல்வி கற்க முஸ்லிம்கள் விரும்பவில்லை. இச்சூழ்நிலையில்தான் சம்மாந்துறையின் மேற்கே வீரமுனையை அண்மிய பகுதியில் பெரிய பள்ளிவாசலுக்குப் பக்கத்தில் 1860.04.01 மெதடிஸ்தமிஷன் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இப்பாட சாலையே முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசத்தில் உருவாக்கப்பட்ட முதல் கிறிஸ்தவ மிஷனறியாக இருக்கலாம். ஒரு கிறிஸ்தவ மத போதகர் மூலமே இப்பாட சாலை ஆரம்பிக்கப்பட்டதாக அறிய முடிகிறது. இப்பாடசாலையின் முதல்நாள் இரு பிள்ளை களும் ஒரு கிழமைக்குள் 12 பிள்ளைகளும் கல்வி கற்கச் சேர்க்கப்பட்டதாகப் பாடசா லையில் தொங்கவிடப்பட்டுள்ள குறிப்புகளி லிருந்து அறியமுடிகிறது.

கிறிஸ்தவ திருச்சபையின் முகாமைத்துவத்தில் இயங்கிய இப்பாடசாலையில் பிள்ளைகள் கல்வி கற்பதற்காகச் சேர்வதில் ஆர்வம் காட்டவில்லை. எனவே, மாலை நேரங்களில் மிஷனறியைச் சேர்ந்தவர்களும் ஆசிரியர்களும் சேர்ந்து வீதி வழியாக கீழ்வரும் எண்ணெய்ச் சிந்துப் பாட்டைப் பாடிக்கொண்டு வீடு வீடாகச் சென்று பிள்ளைகளைப் பள்ளிக்குச் சேர்த்த தாக அறிய முடிகிறது:

சீரார் சனியென்னை சிந்து கனையான்பாட
வேராய்ப் பெரியதொரு பெருமானை
முன்னடைவாய்
முன்னாளிலே நடந்த முறைமைப் படியாக
இந்நாளிலே சிறியோர் எண்ணத் தமிழ்பாட
மாதாவே நீரும் மகவு பெறவேண்டுமென்று
நேராத கோயிலெல்லாம் நேர்ந்து
தவமிருந்து
கர்த்தன் விதிப்படியே கருப்பட்டேன்
உன்வயிற்றில்

ஒருமாதமாகி உதிரம் மிகச் செறிந்து
இரு மாதமாகி இரு விளியும்
வெண்ணிறமாய்
மூன்று மாதத்தில் முறை முறையே
சோகமதாய்
நான்கு மாதத்தில் நடைகுறைந்து கால்
தளர்ந்து
ஐந்து மாதத்தில் அரைவயிறு சூலாகி
ஆறு மாதத்தில் அதிக வருத்தமாய்
ஏழு மாதத்தில் இருந்தெழும்ப மாட்டாமல்
எட்டு மாதத்தில் எடுத்தடியும் வைக்காமல்
ஒன்பது மாதத்தில் ஓயாத நோக்காடாய்
பத்தும் சுமந்து பாலகனைப் பெற்றீரே
பிறந்தபிள்ளை ஆண்பிள்ளை எனக்கேட்டு
பேரானந்தம் அடைந்தீரே
மருத்துவிச்சிகொண்டு மார்போடனைத்து
தொப்புள் கொடியறுத்து
தூயதிரு மேனியிலே தவிடு
கொண்டுதான் புரட்டி தண்ணீர்
முழுக்காட்டி
உடுபிடவையால் உன்னீரம் தான்
துடைத்து
பள்ளிக்கு வைத்தீரே பருவமிதன்றறிந்து
வெள்ளிக்கிழமை விடிந்திரண்டு
நாளிகையில்
எண்ணுமெ முத்தும் இலக்கணமும்
உள்ளதெல்லாம்
வண்ணமாகதாக வகுத்தாரே எங்கள்
குரு

இப்பாடலின் மூலம் பெண் பிள்ளைகளை விட ஆண் பிள்ளைகளைப் பெறுவதிலுள்ள மகிழ்ச்சியையும் பிள்ளைகளைக் குளிப்பதிலுள்ள நாட்டார் அம்சங்களையும் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டிய அவசியத்தையும் அறிய முடிகிறது. இவ்வளவு கஸ்டப்பட்டுப் பெறும் பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

மேலும், மேலே குறிப்பிட்ட சம்மாந்துறை மெதடிஸ்தமிஷன் பாடசாலையில் கற்பித்த ஆசிரியர் ஒருவரின் ஓய்வு பெறும் விழாவில் பாடப்பட்ட வாழ்த்துப்பாவிலிருந்தும் கிறிஸ்தவர்களின் கல்வி முயற்சியினைக் கண்டுகொள்ள முடிகிறது:

திண்ணைப்பள்ளி திக்கெலாம் திகழ்ந்து
பண்புறுகாலை பாடம்படித்திட
சம்மாந்துறைக்கோர் சற்சனர் பள்ளியை
கைம்மாறின்றி எம்மவர்க்கென்றே
பாங்குடன் அமைத்த ஆங்கிலத்துரைமார்
நீங்காக் குருவாய் நிறுவினர் நீவிர்
பாங்குடன் அமைத்து பாடம் சொல்லிய
நாங்காண முடியாத நாளது பலவாய்
தாங்கிய குருவாய் தாயகத்திலிருந்து
நாற்பத்தி மூன்று நல்லாண்டுகளாய்
தமிழுணர் சால்புறு தந்தாய் வருக.
(இதன் முழுப்பகுதி பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது)

இப்பாடலிலிருந்து இந்து சமய மரபிலிருந்த திண்ணைப்பள்ளி மரபு முஸ்லிம்களுக்கு மத்தியில் இருந்ததையும் அக்காலகட்டத்திலே சம்மாந்துறையில் ஆங்கிலத்துரைமாரின் உதவியுடன் கிறிஸ்தவமிஷனறி பாடசாலை அமைந்ததையும் அது முஸ்லிம்களின் கல்விக்கு உதவியதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

இப்பாடசாலையில் கல்வி கற்ற ஒரு மாணவனின் குறிப்பிலிருந்து அக்கால கல்வி முறையிலிருந்த ஏடு தொடக்குதல் அம்சத்தையும் ஆரம்பக் கல்வி வழங்கும் முறையையும் அம்பாரை மாவட்ட முஸ்லிம்கள் (ஜெமீல், எஸ்.எச்.எம்.1997:47) பற்றிய நூலில் வரலாற்றுப் பாரம்பரியம் என்ற எம்.எல்.ஏ. காதரின் கட்டுரையிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது:

“1916இல் என்னை ஒரு வயல்காரனோடு என் தகப்பனார் பாடசாலைக்கு அனுப்பினார். இதற்கு முன் முஸ்தபா ஆலிம் அவர்களின் அறபு மதுரசாவில் குர்ஆன் ஓதினேன். பாடசாலையில் சேருவதற்கு ஒரு ஓலைப் பெட்டியில் மூன்று கொத்து அரிசியும் முடியோடு ஒரு தேங்காயும் சாம்பு வாழைக்காய் சீப்பொன்றும் பனை ஓலை ஒன்றும் அனுப்பப் பட்டன. இதைக் காத்தமுத்து வாத்தியார் ஒப்புக் கொண்டு அந்த ஓலையில் பனிரெண்டு உயிர் எழுத்துக்களையும் எழுதித்தந்தார். பின்னர் ஒரு வருடத்தில் ஒரு பையில் முள் முருங்கைக் கொட்டையையும் இன்னொரு பையில் மஞ்சடிக் கொட்டையையும் இந்த பனிரெண்டு எழுத்துக்களையும் மற்றும் மெய் எழுத்துக்களையும் பூமியில் எழுதவும் வித்தினங்களால் அடுக்கவும் பழகினேன். இரண்டாம் வருடம் சிலேட் பலகையைப் பாவித்தேன். மூன்றாம் வருடம் புத்தகமும்

பேனையும் மையும் பாவித்தேன். நான்காம் வருடம் சட்டாம்பியானேன். ஐந்தாம் வருடம் கல்முனை வெஸ்லி மிசன் பாடசாலையில் இங்கிலிஸ் கற்கப் போனேன்."

இக்குறிப்பிலிருந்து பாடசாலையில் கற்பதற்கு ஒரு மகனை தந்தையார் வயற்காரனோடு அனுப்பி வைக்கிற செய்தி மிகுந்த விமர்சனத்துக்குரியது. உண்மையில் கல்வியில் கொண்டிருக்கிற நாட்டம் பற்றிய அபிப்பிராயத்தினை அது தெளிவுறுத்துகிறது எனலாம்.

இக்காலகட்டத்தில் ஆங்கிலக் கல்வியில் முஸ்லிம்கள் பெரிதும் அக்கறைப் படாதிருந்ததையும் முஸ்லிம் பெண்கள் கல்வியில் அக்கறை செலுத்தாததனையும் அவர்களை அதன்பால் தூண்டியதனையும் கல்முனை டிஸ்றிக்ட் முஸ்லிம் சங்கம் (Kalmunai District Muslim Association) 1937 ஏப்பிரல் மாதம் எம்.எஸ். காரியப்பரின் சமூகநலத் திட்டங்கள் பற்றி அதன் தலைவர் பி.எம். மக்பூல் ஆலிம் (கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் நினைவுமலர், 2009) வெளியிட்ட பிரசுரத்தில் குறிப்பிட்டிருப்பது இங்கு கவனிக்கத்தக்கது:

"திரு எம்.எஸ். காரியப்பர் வன்னிமையவர்கள் சில வருடங்களாக முஸ்லிம் கல்வி சம்பந்தமாய் அதிக பிரயாசை எடுத்து வருகிறார்கள். கல்முனையிலுள்ள இங்கிலிஸ் பாடசாலையை நிறுத்திவிடத் தொடங்கியபோது இத் துரைமகன் அப்பாடசாலை அதிகாரிகள்முன் தெரிபட்டு நமது அருமைப் பிள்ளைகளை ஆங்கிலப் படிப்பூட்டுவதற்காகப் பாடசாலை நடந்தேற வேண்டுமென வாதாடி சித்தியடைந்தார். ஒவ்வொரு கிராமத்திலும் பாடசாலைகள் ஸ்தாபித்திருக்க வேண்டுமென அரசினரிடம் அனேக ஆண்டுகளாய் பொத்துவில் துவற்கமாய் தான் பரிபாலனம் செய்த ஒவ்வொரு பகுதியிலும் வாதாட்டம் நடத்திக்கொண்டே வருகிறார். நமது நாடு பொருளாதார விருத்தியடைந்து, கல்வி சிறந்து, நாட்டு மக்கள் இக்கால உலகப் போக்கோடு முன்னேற வேண்டுமென்னும் நோக்கத்துடன் தமது உத்தியோகத்தை நடத்திவரும் இவ்வாலிப துரைமகனைக் கற்றறிந்த தமிழ் மக்கள் ஒவ்வொரு ஸ்தானத்திலும் கையேற்ற மனமகிழ்ந்து நன்றிபாராட்டி வருகிறார்கள். ஆனால், சோனகரில் சில மோட்டாத்துமாக்கள் மேற்சொன்ன துரைமகனையிட்டு அயோக்கிய வாக்கியங்களைப் பேசிக்கொண்டும் எழுதிக்கொண்டும் திரிகிறதாக நாம் அறியும்போது எமக்கு மட்டிலாத் துக்கமும் வெட்கமும் உண்டாகின்றது. ஆயினும், எழுபதினாயிரம் முஸ்லிம்கள் தங்கள் தலைவராகக் கையேற்றிருக்கும் ஓர் புண்ணிய சீலரை ஐந்து எண்களுக்கு மேற்படாத சில போலிப் பாமரர்கள் இக்கல்விமானைக் கொடும்பு பேசுதல் பூரணை சிந்திரனைப் பார்த்துக் குற்றம் கூறுவதற்கு நிகராய் இருக்கிறது.

இன்னம் பெண்கள் கல்வி கற்கத் தேவையில்லை என்று சில முஸ்லிம்கள் கூறுவார்கள். இந்தத் தப்பிதமான எண்ணமே காரணமாக பெண்கல்வி விஷயத்தில் மட்டக்களப்பு முஸ்லிம்கள் மிகவும் தாழ்ந்த நிலைமையிலிருக்கிறார்கள். ஐந்து ஆண் பிள்ளைகள் படிப்பதிலும் ஒரு பெண் பிள்ளை படிப்பது எங்கள் ஜாதியவர்களுக்கு கூடிய நன்மையை விளைவிக்கும் என்று திரு எம்.எஸ். காரியப்பர் வன்னிமை எங்களுக்கு அடிக்கடி சொல்லி வருவதுடன் எல்லா முஸ்லிம் கிராமங்களிலும் பெண் பாடசாலைகளை கவர்ண்மென்டாரைக் கொண்டு ஏற்படுத்தியிருக்கிறார்கள். சொற்ப காலத்துக்குள் மருதமுனை, நாய்ப்பட்டிமுனை, கல்முனைக்குடி, மாவடிப்பள்ளி கிராமங்களில் பெண் பாடசாலைகள் நடைபெறும். எனது சகோதர, சகோதரிகளே! இப்பாடசாலைகளில் உங்கள் பெண் மக்களை நூற்றுக்கணக்காய் ஆயிரக்கணக்காய் அனுப்பிப் படிப்பியுங்கள். தவறுகிறவர்களை வழக்கு வைத்தால் வன்னிமையை மனம் நோகாதேயுங்கள். ஏனெனில், அவரின் செய்கை உங்களின் நன்மையையே கருதியது. இச்செய்கை உங்களுக்குக் கசப்பாயிருந்தாலும் உங்கள் பிள்ளைகளுக்கு இனிப்பாய் முடியும்."

இவ்வாறு விழிப்புணர்வூட்டப்பட்ட முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிபற்றிப் பின்வரும் குறிப்பும் மிக முக்கியமானது. சம்மாந்துறையில் முதன்முதலில் உருவாக் கப்பட்ட மெதடிஸ்தமிஷன் பாடசாலைக்குப் பின்னர் அரசினர் பாடசாலை ஒன்று 1910 இல் ஆரம்பிக்கப்பட்டதாக அறியமுடிகிறது.

இப்பாடசாலையே பின்னர் சம்மாந்துறை தேசிய பாடசாலை அமைந்துள்ள இடத்தில் 1950ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்த பாடசாலை அமைந்துள்ள நிலம் பள்ளி வாசலுக்குச் சொந்தமானது. கிறிஸ்தவ மிஷனறிகள் பாடசாலையை உருவாக்குகிற மரபுபோல முஸ்லிம்களின் பள்ளிவாசல் நிருவாகமும் பாடசாலையை உருவாக்கின வரலாறு மிக முக்கியமானது. இதனைப் பற்றிப் பின்வரும் குறிப்பு கவனத்திற்குரிய தெனலாம்:

"மட்டக்களப்புத் தரவை என்றழைக்கப்பட்ட பிரதேசத்திற்கு அண்மித்தாகவுள்ள பள்ளி வாசலுக்குச் சொந்தமான நான்கு ஏக்கர் நிலம் தற்போதைய தேசிய பாடசாலைக்காக 1950.03.03இல் ஒதுக்கப் பட்டது. கிறிஸ்தவ மிஷனறிகள் பாடசா லையை உருவாக்கு வதுபோல் சம்மாந்துறை பள்ளிவாசல் நிருவாகம் பாடசாலையை உருவாக்கியது ஒரு புதிய வரலாறு (வீரகேசரி: 26.09.2013, பக். 27)

மட்டக்களப்புத் தரவை என்பது சம்மாந் துறையில் அமைந்துள்ளது. சம்மாந துறைதான் மட்டக்களப்பு என்பது. தற் போதைய மட்டக்களப்பு என்பது புளியந்தீவு ஆகும். இவ்வாறு முஸ்லிம்களின் கல்வி மரபில் கிறிஸ்தவம், பெண்கள், கல்விமுறை முதலான செய்திகளை இக்கட்டுரை கொண்டுவருவதன் மூலம் மேலும் புதிய ஆய்வுகளை வேண்டிநிற்கிறது.

## பின்னிணைப்பு

மலர்ந்த முகத்தோடு மக்களுக்கே அன்பு
கலந்த தமிழூட்டும் கண்ணியனே கலந்தர் லெப்பை
பேராய் பெரியாய் பிதாமகராய்
இவ்வூரில் சீராய் இருப்பாய் சிறந்து
இலங்கா ஈழத்து இளங்கதிர் உதிக்கும்
நலம்பல உடைய நாடெனும்
மட்டக்களப்பெனும் பெருநகர்க் கண்மையில்
தெற்கே வளப்பெறும் மிக்க வண்டமிழ்ச் சிற்றூர்
சம்மாந்துறையெனும் சகலரும் மதிக்கும்
இம்மாநிலத்தில் இறையருளாலே
பத்தொன்பது நூற்று நான்காமாண்டு
பாத்திம்மா தவப்பயனாய் வந்து
முகம்மது இஸ்மாயிலின் மூத்த புத்திரனாய்
அகமுடையோர்கள் அகமகிழ்ந்திடவே
உவகையில் உதித்த உத்தமரே வருக!

திண்ணைப்பள்ளி திக்கெலாம் திகழ்ந்து
பன்புறுகாலை பாடம்படித்திட
சம்மாந்துறைக்கோர் சற்சனர் பள்ளியை
கைம்மாறின்றி எம்மவர்க்கென்றே
பாங்குடன் அமைத்த ஆங்கிலத்துரைமார்
நீங்காக் குருவாய் நிறுவினர் நீவிர்
பாங்குடன் அமைத்து பாடம் சொல்லிய
நாங்காண முடியாத நாளது பலவாய்
தாங்கிய குருவாய் தாயகத்திருந்து
நாற்பத்தி மூன்று நல்லாண்டுகளாய்
தமிழுனர் சால்புறு தந்தாய் வருக.

பள்ளிவாயல் பலமரைக்காயருள்
உள்ளொளி பரப்பிய உருவே வருக.
கிராமச்சபையின் கிளந்தொரு மங்கமாயி
பராமிய கடமையும் பார்த்தாய் வருக.
கூட்டுறவு இயக்கம் கூடின காலையில்
நாட்டினர்க்குதவி நயந்தாய் வருக!

வருக வருக வளம்பெறுக வருக
வாழ்க பல்லாண்டு மங்களம் ஐயா!

## உசாத் துணைகள்:

கந்தையா, வி.சி. (1964), மட்டக்களப்புத் தமிழகம், பொன்னையா வெளியீடு.

மன்சூர் மொஹமட் பாஸில், (2004), "இலங்கையின் இனத்துவப் பிணக்கில் முஸ்லிம் காரணி" பல்வகையினைக் கையாளுதல், நெதர்லாந்து சர்வதேச உறவுகள் நிலையம், க்ளின்ஜென்டால்

ஜெமீல், எஸ்.எச்.எம்., (1997), அம்பாரை மாவட்ட முஸ்லிம்கள்- கலாசார சமய அலுவல்கள் அமைச்சு, கொழும்பு.

நு.்.மான், எம்.ஏ. (2009), "கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் கிழக்கு முஸ்லிம் அரசியலின் விடிவெள்ளி" கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் நினைவு மலர் - கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் ஞாபகார்த்த முத்திரை வெளியீட்டுக் குழு.